**1990 சுவஸரிய மன்றம் - 2022**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

1990 சுவசெரிய மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக்கூற்று, திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சுவசெரிய மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சுவசெரிய மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மற்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சுவசெரிய மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சுவசெரிய மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 அமைப்பின் தொடர்ந்து இயங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 24 திகதி சுகாதார அமைச்சு மற்றும் GVK EMRI Lanka (Private) Ltd. நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவசெரிய மன்றச் சட்டத்தின் பிரிவு 26(இ) இன் பிரகாரம், சுவஸெரிய | உரிய அனைத்து ஆவணங்கள் மற்றும் உரிமைகள் குறிப்பிட்ட அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், மொத்தச் செலவுகள் மீளளிப்புச் செய்யப்படாமல் செயற்பாட்டு அலுவல்களை செயற்திறனுடன் செயற்படுத்துவதில் கடினங்கள் தொடர்பாக | இது தொடர்பாக பொறுப்புச் கூறவேண்டிய தரப்பினருடன் கலந்துரையாடி நிறுவனத்தை தடைகளின்றி நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான பொறிமுறை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

மன்றத்தின் செயற்பாடுகளுக்காக செலவிடப்படும் மீண்டுவரும் செலவுகள் அரசாங்கத்தினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 சனவரி 01 ஆந் திகதியளவில் ரூபா 330,091,526 மற்றும் மீளாய்வாண்டுக்கு உரியதாக மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் 2019 ஆண்டிற்காக அரசாங்கத்தினால் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே 25 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 75 சதவீதம் வரை குறைப்பதற்கு 2019 ஆகஸ்ட் 27 திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்ட பின்னர் மன்றத்தை நடாத்திச் செல்வதற்கான பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான பிரேரணை ஒன்று 2023 மார்ச் 31 திகதி வரை சமர்ப்பித்திருக்காததுடன், இந்த நிலைமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக நேரடியாக தாக்கம் ஏற்படுத்தக் கூடும் என அவதானிக்கப்பட்டது.

சுட்டிக் காட்டியது என, 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் ஒரு வருகைக்கு 02 டொலர் வீதம் அறவீடு செய்வதற்காக திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும், அரசாங்கம் மாற்றமடைதல் மற்றும் அமைச்சுக்கள் மாற்றமடைதல் காரணமாக அது செயற்படுத்தப்படாததுடன் கொவிட் - 19 தொற்றுநோய் நிலமையின் போது மற்றும் அதற்கு முன்னர் பொது மக்களுக்கு வழங்கிய சேவையை கருத்திற்கொண்டு அமைச்சரவைத் தீர்மானத்தை மாற்றியமைத்து நிதி வழங்குமாறு கோரியிருந்தமை, 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதி தற்போதைய சுகாதார இராஜாங்க அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேலுமொரு கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதற்குரிய அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்டதாகவும், 2023 சனவரி மாதமளவில் திறைசேரியின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை காரணமாக முகாமைத்துவ சபை 1990 சுவசெரிய பிணியாளர் காவு வண்டிச் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு நிறுவன மற்றும் மக்களின் உதவியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIV அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | தாபனவிதிக் கோவையின் பிரகாரம், உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூபா 2.00 மைல் கட்டணம் செலுத்த முடியும் என்றாலும், அந்த விதிகளை மீறி மற்றும் நிறுவன இயக்குனரின் முறையான அனுமதி இல்லாமல், நோயாளர் காவு வண்டியின் சேவையை கண்காணிக்க மாவட்ட அளவில் நிறுத்தப்பட்டுள்ள மேற்பார்வையாளர்களுக்கு கள ஆய்வுக்காக தங்கள் தனிப்பட்ட மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துவதற்காக மன்றத்தினால் ஒரு கிலோமீட்டருக்கு ரூபா 23 முதல் ரூபா 48 வரையான 7 பல்வேறு வீதங்களின் கீழ் கொடுப்பனவு செலுத்த பணிப்பாளர் குழுவும் ஒப்புதல் அளித்திருந்தது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் 191 சந்தர்ப்பங்களில் 295,400 கிலோமீட்டருக்கு ரூபா 9,787,851 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்து. | மாவட்ட மட்டத்தில் நிலையப் பொறுப்பான அதிகாரிகள் கள ஆய்வுகளுக்கு அவர்களது சொந்த வாகனங்களை பயன்படுத்துவதுடன், அவ்வாறான சுற்றுலாக்களுக்கு அவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படாது என்பது, தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய கி.மீட்டருக்கு ரூபாய் 2 கொடுப்பனவு வழங்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால் மாவட்ட பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களுக்கு முதலீடு செய்ய நேரிடும் என்பது, அதற்கு மேலதிகமாக எரிபொருள், காப்புறுதி, ரயர், பட்டரி, பராமரிப்பு போன்ற செலவினங்களை மேற்கொள்ள நேரிடும் என்பது மற்றும் கிரய சேமிப்பினை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபைக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சேவையினை மேம்படுத்துவதற்கு போக்குவரத்துப் படியாக காணப்படும் | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயல்பட வேண்டும் என்பதுடன் நிறுவன பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையாக அங்கீகாரமின்றி இவ்வாறான கொடுப்பனவுகள் செலுத்தப்பட கூடாது என்பது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எரிபொருள் விலையின் அடிப்படையில் ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 23 முதல் ரூபா 48 வரையிலும் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது என்பது. | |
| (ஆ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான தாபன வழிகாட்டிக் கோவை/கையேடு | | | | |
| | (i) வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | தேசிய கொள்கைச் சட்டகத்தினுள் நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சபையினால் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அந்த திட்டம், செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்துடன் அமைச்சின் செயலாளரின் ஊடாக திறைசேரிக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், சுவசெரிய மன்றத்தினால் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஒரு கோவிட் 19 ஆண்டாக காணப்பட்டதுடன், இதில் அன்றாட அவசரநிலைகள் தவிர, கோவிட் 19 நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற அரசாங்கத்திற்கு உதவுவதில் அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்தியது, 2022 ஆம் ஆண்டின் போது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தொடர நிதி திரட்டவும், மருந்துகளுக்கான உதவிகளை பெறவும், சேவையை நிலைநிறுத்துவதற்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் ஒவ்வொரு நாளும் போராடினார்கள் என்பது, சேவைகள் இயங்குவதை உறுதிசெய்ய அனைத்து ஊழியர்களும் மேலதிக நேரம் வேலை செய்ய | வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டியிருந்தது, 2023 ஆம் ஆண்டின் போது அவர்கள் மீண்டும் ரூபா 1.4 பில்லியன் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மற்றும் பாரிய ஊழியப் பற்றாக்குறையை எதிர்கொண்டனர் என்பது, 1990 சுவசெரிய மன்றத்தின் ஒரே நோக்கு உயிர்களை காப்பது என்பது, எனினும், எமக்கு எமது உள்ளக மூலோபாயத் திட்டமொன்று உள்ளது என்பது. | |
| (ii) | வழிகாட்டிக் கோவையின் 5 ஆம் பந்தி | சுவசெரிய மன்றத்தினால் வருடாந்த பாதீட்டினை தயாரிக்கும் போது பின்னிணைப்பு I இன் 3(a) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட வருமான அறிக்கை மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதாகவும், 2023 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட நிதி நிலைமைக்கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியன சமர்ப்பிக்கப்படவில்லை என்பது மற்றும் எதிர்காலத்தில் அதற்கான வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படும் என்பது. | வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 293,067,249 இற்கான மிகையொன்று ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 51,365,905 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளின் ரூபா 344,433,154 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு சுவசெரிய மன்றத்தின் அந்நிய

பயன்பாட்டு நாணயக் கணக்கின் பறிமாற்றல் பெறுமதி அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் நிதிக் குத்தகை முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு 2021 திசெம்பர் 30 ஆந் திகதி சுவசெரிய மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த பெறுமதி தொடர்பில் திட்டவட்டமான விடயங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காத 25 பிணியாளர் காசு வண்டிகளை பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த பிணியாளர் காசு வண்டிகள் இந்த மன்றத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்கு பொருந்தும் வகையில் மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்காத காரணத்தால் வழங்குநரின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த பிணியாளர் காவு வண்டிகள் மருத்துவமனை சிகிச்சைகளுக்கு உரிய பிணியாளர் காவு வண்டிகளுக்கான அமைப்புக் குறிப்பீடுகள் அல்லது 1990 சுவசெரிய மன்றத்தின் எந்த நபரையும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் நியமிக்காது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பது, வேன் வண்டிகளை பிணியாளர் காவு வண்டிகளாக மாற்றியமைத்தல் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான மூலதன செலவினங்களுக்காக பணம் வழங்குதல் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் பல்வேறு கோரிக்கைகளின் பின்னர் மேற்கொள்ளப்பட்டது என்பது. | மேம்படுத்தல் பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு இந்த பிணியாளர் காவு வண்டிகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுவசெரிய மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,992 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணி 1,307 ஆகும். அதற்கமைய பதவியணிப் பற்றாக்குறை 685 ஆக இருந்ததுடன், அவற்றில் 321 பேர் நோயாளர் | ஒட்டுமொத்த பதவியணியை நிரப்புதல் அத்தியாவசியமான போதிலும், அரசின் பிரமாணங்களுக்கமைய எமது அனைத்து ஆட்சேர்ப்புகளையும் இடைநிறுத்துவதற்கு எமக்கு நேர்ந்துள்ளது என்பது, 2023 சனவரி 09 ஆந் திகதி சுகாதார அமைச்சின் மேலதிக | உரிய முறையில் அத்தியவசிய பதவியணிக்காக ஆட்சேர்ப்பதற்கும் அத்தியவசியம் அல்லாத பதவிகள் இருப்பின் அவற்றை கீழ்படுத்தி பதவியணி திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| காவு வண்டிச் சாரதிகள் ஆகும். | செயலாளருக்கு பிரதியொன்றுடன் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து சேவையை தொடர்ந்து பேணுவதற்கு ஆகக் குறைந்தது பதவியணி 1661 ஆக காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது 1,312 வரையிலும் குறைக்கப்பட்டுள்ளது என்பது, 2023 ஆம் ஆண்டுக்காக சம்பளத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 1,661 பதவியணிக்குரிய சம்பளங்களை முகாமை செய்ய இயலும் என்பது அறிவிக்கப்பட்டது என்பது. | |
| (ஆ) உயர் முகாமைத்துவ பதவியொன்றான நிதித் தலைவர் (Head of Finance) பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத நிதி ஆலோசகராக உத்தியோகத்தர் ஒருவர் 06 மாத காலத்திற்காக 2021 செப்தம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நியமன நிபந்தனைகளுக்கமைய மேலும் 06 மாதங்களுக்கு ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்ய இயலுமான போதிலும், 2023 ஏப்ரல் 19 ஆந் | தொடர்ச்சியான நேர்முகப் பரீட்சைகளுக்கு பின்னர், தலைமை நிதி அதிகாரி பதவியின் தேவைகளை பூர்த்தி செய்ய விண்ணப்பதாரியொருவர் இல்லாததால், பணிப்பாளர் சபையின் ஒப்புதலின்படி ஒரு வருட காலத்திற்கு ஒரு ஆலோசகர் பணியமர்த்தப்பட்டார், அதே நேரத்தில் நிதி மற்றும் வழங்கல் சங்கிலி நிதிச் செயல்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக நிதி மற்றும் வழங்கல் முகாமையாளர் பதிற்கடமை நிதி தலைவராக பதவி உயர்வு பெற்றார். அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதால் அந்த நபர் தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யாவிட்டாலும், மன்றத்தின் பதிற்கடமை | அனைத்து ஆட்சேர்ப்புகளும் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திகதி வரையிலும் மேலும் 06 மாத காலப்பகுதிக்கு அவரின் ஒப்பந்தக் காலம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, நிதி மற்றும் வழங்கல் முகாமையாளர் பதவி வகிக்கும் பெண் உத்தியோகத்தருக்கு 2021 ஆகஸ்ட் 21 ஆந் திகதி முதல் ஒரு வருட தகுதிகாண் காலம் உள்ளடங்களாக பதிற்கடமை நிதி தலைவர் பதவிக்காக பதவியுயர்வொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், நியமன நிபந்தனைகளுக்கமைய அந்த பெண் உத்தியோகத்தரால் நிதி தலைவர் பதவிக்குரிய தகைமைகள் ஒரு வருட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், தகுதிகாண் காலத்தை 03 மாதங்கள் வரை நீடிக்க முடியும். எனினும், முறையான அங்கீகாரமின்றி அந்த பெண் உத்தியோகத்தர் 2023 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் நிதித் தலைவர் பதவியில் பதிற்கடமையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிதித் தலைவர் பதவியை தொடர வேண்டியிருந்தமை, ஆட்சேர்ப்பைத் தொடங்க அரசாங்கம் அனுமதி வழங்கியவுடன், பதிற்கடமை நபருக்கு என்ன செய்வது என்று தீர்மானிக்கப்படும் என்பது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய PFD/RED/01/04/2014/01 இலக்கம் கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால | 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2021 நவம்பர் 16 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பொது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நோக்குடன் குறிப்பிட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கான சுற்றறிக்கையின் (அ), (ஆ), (ஈ), (உ) மற்றும் (ஊ) ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | முயற்சிகள் மற்றும் நிறுவன நிர்வாகம் தொடர்பான வழிகாட்டல்களின் நோக்கம் I இன் கீழ் வழங்கப்பட்டுள்ள தேவைப்பாடு மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டது என்பது, எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது என்பது. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாகய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய ஆம் திகதிய டீஎம்ஏ/1-2019 இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மன்றத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் இந்த கேரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் போதும் இந்த கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைக்கமைய சுகாதார அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரால் 2023 ஆம் ஆண்டுக்காக உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு 1990 சுவசெரிய மன்றம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |